2-3 மாதத்திற்குப் பிறகு தான சம்பளம் வாங்க முடியும் என்ற சூழ்நிலை இருந்தது. காரணம், அவர் கடைசியாக பெற்ற சம்பளம் 'லாஸ்ட் பே' என்பதற்கான சான்றுகள் உடனடியாகக் கிடைக்காமல் இருந்ததுதான். அதை அனுப்பி வைக்க 2 மாதம், 3 மாதம் ஆகிற சூழ்நிலை இருந்தது. அதை மாற்றுவதற்கான வகையில், தற்போது மாற்றலாகிச் செல்லும்போதே அவர் கையில் 'லாஸ்ட் பே சர்ட்டிபிகேட்' நகல் ஒன்று கொடுத்துவிடவேண்டுமென்றும், மற்றுமொரு நகலை அஞ்சல் மூலம் அனுப்பிவிடவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறோம். ஆகவே, அவர் தடங்கல் இல்லாமல் உடனடியாக சம்பளம் பெற்றுக்கொள்ள இப்போது வழி பிறந்து இருக்கிறது.

*Teachers Provident Fund*

* 433 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether it is a fact that private managements of Aided Schools contribute towards Teachers Provident Fund; and

(*b*) if so, the amount of contribution?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த பிராவிடென்ட் பண்டு பல தனியார் பள்ளிகளில் கொடுக்கவில்லை, என்பது சர்க்காருக்குத் தெரியுமா? கொடுக்கவில்லை என்றால் அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்தேசித்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பிராவிடென்ட் பண்ட் செலுத்துகிற அத்தகைய முறை, உதவி பெறும் துவக்கப்பள்ளிகள் உதவிபெறும் உயர்நிலைப் பள்ளிகள் பொறுத்தவரையில் 1964–65-ம் ஆண்டிலிருந்து நிறுத்தப்பட்டு விட்டது. அதற்குப் பிறகு, பிராவிடென்ட் முறை இல்லை. ஏனெனில் அரசாங்கமே இலவசக்கல்வி கொண்டு வந்ததால் அந்த முறை இல்லை. 1—4—64 முதல் உதவிபெறும் துவக்கப்பள்ளிகளைப் பொறுத்தும், 1—6—65 முதல் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள் பொறுத்தும் நிறுத்தப்பட்டு விட்டது. 1—6—70 லிருந்து

*1975 மார்ச் 24]*

அதுவரையில் அரசாங்கமே முழு பிராவிடெண்ட் பண்டு செலுத்தி வந்தது. 1—6—70-லிருந்து அவர்களுக்கு பென்ஷன், தரும் முறை, நாம் மேற்கொண்ட காரணத்தாலும், தாராள ஓய்வூதியம் தரும் முறை, குடும்ப ஓய்வூதிய முறை கொடுத்ததன் காரணமாக, 1—6—70-லிருந்து அரசாங்கத்தின் சார்பாகவோ, பள்ளிகளின் சார்பாகவோ இப்போது செலுத்தப்படுவதில்லை. அவர்களுக்கு கிராசுவுடி, பென்ஷன் வழங்குவதன் காரணமாக, பி.எப். முறை இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், இப்போதும் கூட ஆசிரியர்கள் 10 சதவிகிதம் பிராவிடன்ட் பண்டு செலுத்துகிறார்கள். இந்தப் பள்ளி மானேஜ்மென்ட் 10 சதவிகிதம் கொடுப்பதில்லை. பதவி முடிந்த பிறகு கிராஜுவிட்டியாக 16 மாத சம்பளம் கொடுக்கிறார்கள். ஏற்கெனவே இந்த 10 சதவிகிதம் மானேஜ்மென்ட் கொடுத்தார்கள். அதை அவர்கள் நேரடியாக அரசுக்கு, கிராஜுவிட்டி எவ்வளவு செலுத்துகிறார்களோ அந்த அளவுக்கு செலுத்த வேண்டுமென்று ஏதாவது ஆணை பிறப்பிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதற்கான விபரம் தற்போது இல்லை; தனிக் கேள்வி போடவும்.

## ஆரம்பப்பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள்

*434 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரம்பப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமித்திடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 1–5 வகுப்புகளைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சியைக் கட்டாயப் பாடமாக அரசு வைத்திருப்பதால் அதற்கு ஏற்றவகையில் கீழ் மட்டத்திலிருந்தே மாணவர்களை தயார் படுத்தும் வகையில் ஆரம்பப்பள்ளிகளிலும் உடற்பயிற்சியை நல்லமுறையில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?